எல்லாம் அவ்வப்போது சரி செய்யப்பட்டன. அவை பாதுகாப்புடையனவாக ஆக்கப்பட்டன.

Operations were performed as usual by the Surgeons by sharing in the other theatres. The carbolisation and cleaning work were done everyday as a routine in the Operation Theatre of Raja Mirasdar Hospital. There was no Tetanus case due to operations from the Operation Theatre of Raja Mirasdar Hospital, Thanjavur, during the latter half of 1970. The concerned theatres are washed daily in the morning before starting the operations and in the evening, after the operations are over with antiseptic lotions like dettol and then corbolised. Once a week the flooring and walls are washed with washing soda and soap and then washed with antiseptic lotions and corbolised. As there are no operations on Sundays, no washing is done unless there are emergencies. This procedure is being followed in the Thanjavur Medical College Hospital as a routine and I feel that the Department has taken every step to see that there is no such occurrence thereafter.

திரு. ஜி. சுவாமிநாதன் : *தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அறுவைக் கூடத்தில் உள்ள ஒரு ஏர்-கண்டிஷன் யூனிட் வழியாக பக்கத்தில் சாணம், குப்பை முதலியவை கொட்டி வைத்திருந்த வெற்றிடத்திலிருந்து அந்த யூனிட்டுக்குள் கிருமிகள் வந்திருந்து "சுவேப்" எடுக்கும்போது தெரிந்திருக்கிறது. இதன் காரணமாக இரு அறுவைக் கூடங்களை 8, 9 மாதங்கள் மூடிவைத்திருக்கிறார்கள். சரியாகக் கண்காணிக்காத காரணத்தால், இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அங்கு இப்போது இரண்டு தியேட்டர்கள் இயங்கவில்லை. அதனால் பல பிரிவைச் சேர்ந்த அறுவை மருத்துவர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் பல அறுவை சிகிச்சைகளைச் செய்ய முடியாத நிலைமையும் உள்ளது என்பதையும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்து இந்த நிலைமையை உடனடியாகக் கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *இந்த விவரம் இலாகாவினருக்குத் தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்படும்.*

Rupee-a-Measure Scheme

*** 70 *Q.*—THIRU G. SWAMINATHAN :** Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the quantum of rice supplied under Rupee-a-Measure Scheme has been reduced in Madras City from May 1971; and

(*b*) if so, the reason therefor?

ரூபாய்க்கு படி அரிசித் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் : *மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

(அ) சென்னை மாநகரில் ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அரிசியின் அளவு 1971-மே திங்களிலிருந்து குறைக்கப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?

31st January 1972]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ஈடுசெய் விலையில் அரிசி விற்பனை செய்யும் திட்டம் ஏழை எளியவர்களுக்கு உதவி அளிக்கும் ஓர் ஏற்பாடேயாகும். அவர்களது முழுத்தேவைகளையும் ஈடு செய்வது அதன் நோக்கமன்று. வெளிச்சந்தையில் மிகுந்த அளவில் அரிசி கிடைப்பதன் பயனாக, ஈடு செய்விலையில் அரிசி விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் அளவு குறைக்கப்படலாம் எனக் கருதப்பட்டது. கொள்முதல் விலைகள், கட்டுபடியாகும் விலைகள் ஆகியவை பெருகின. அதன் விளைவாக ஈடுசெய் உதவித்தொகையும் அதிகமாகியது. வழங்கப்படும் அரிசியின் அளவு குறைக்கப்பட்டுள்ளபோதிலும் ஈடுசெய் உதவித்தொகை அதற்கேற்பக் குறையவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்டபோது படி அரிசித் திட்டத்தினுடைய அளவு குறைந்திருக்கிறதா என்று கேட்டேன். படி அரிசித் திட்டத்தையே எடுத்துவிட்டார்கள். இப்போதுள்ள நிலைமை என்ன? இதைக் குறைவு படாமல் முழு அளவு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. குறைந்த அளவு கொடுத்தால் போதுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது முழு அளவும் எடுத்துவிட்டால் என்ன செய்யப்போகிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். இப்போது படி அரிசித் திட்டத்தின் கீழ் அரிசி கொடுக்கவில்லை என்றாலும், அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாத விலையில் லாப நஷ்டம் இல்லாத நிலையில் அரசே விநியோகிப்பது என்று முடிவெடுத்து அதன்படி கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

THIRUMATHI S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, is the Minister aware that even in the case of charitable institutions and orphanages, their quantum of rice has been cut and they are made to buy it from the open market. This has made it very difficult for the institutions.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே யார் யார் படி அரிசித் திட்டத்தினால் பயன்பெற்று வந்தார்களோ அவர்களுக்கெல்லாம் பொது மக்களுக்குக் கொடுக்கிற அளவுக்கு அரிசி வழங்கப்படுகிறது என்று எண்ணுகிறேன். அப்படி வழங்கப்படவில்லை என்றால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். அங்கத்தினர் அதுகுறித்துத் தெரிவித்தால், ஏற்பாடு செய்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : May I know whether any system exists at present for distribution of rice through fair price shops and if so, what is the price fixed by the Government for the lowest variety of rice?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்போதே சென்னையில் 200-க்கு மேற்பட்ட கடைகளை நாம் நியமித்திருக்கிறோம். அவர்கள் மூலமாக அரிசி விநியோகித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது விலை என்ன என்று கேட்டார்கள். விலை நிச்சயமாக எனக்குத் தெரியவில்லை. ஒரு ரூபாய் எட்டு பைசா அல்லது பத்து பைசா இருக்குமென்று நினைக்கிறேன். அரசாங்கத்திற்கு லாப நஷ்டம் இல்லாமல் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.